DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 490/2025

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | குமார் |
| Father / Husband Name | கோவிந்தராஜ் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 05.03.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது இந்திராபுரத்தில் வசித்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். தேதி மாதம் ஞாபகமில்லை, சுமார் 1 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் இரவு 8.00 மணிக்கு நான் புழுதிவாக்கம் ஒயின்ஷாப்பிற்கு எனது XL இருசக்கர வாகனத்தில் சென்றபோது ஆஜர் எதிரி என்னிடம் லிப்ட் கேட்டார், நான் அவரை ஏற்றிக்கொண்டு போகும்போது எனது பின்னால் கத்தியை வைத்து மிரட்டி என்னிடம் ரூ.2000/- பணத்தையும், என்னுடைய XL இருசக்கர வாகனத்தையும் பறித்துக்கொண்டார். நான் பணத்தை வைத்துக்கொண்டு வேலைக்கு செல்ல என்னுடைய இருசக்கர வாகனத்தையாவது கொடுத்துவிடும்படி கேட்டேன். அப்போது எதிரி அவர் வைத்திருந்த கத்தியால் என்னுடைய இடது கையில் கிழித்துவிட்டார். (சாட்சி தன்னுடைய இடது கை முட்டி அருகே உள்ள காயத்தின் தழும்பை காட்டுகிறார்).

2. எதிரி என்னை கையில் கிழித்துவிட்டு வண்டியை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார். நான் கத்திக்கொண்டே வண்டிக்கு பின்னால் சென்றேன். பின்னர் வண்டியை தேடிபார்த்தேன் கிடைக்கவில்லை, காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(எனது கையொழுத்துடன் கூடிய புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. பின்னர் இரண்டு மூன்று நாள் கழித்து போலிசார் போன் செய்து வண்டி கிடைத்துவிட்டதாகவும், வண்டியை திருடிய நபரையும் பிடித்துவிட்டதாக சொன்னார்கள். நான் காவல் நிலையம் சென்று என் வண்டியை அடையாளம் காட்டினேன். தற்போது நீதிமன்றத்தில் போலிசாரால் ஆஜர் செய்யப்பட்ட TN 19 AY 1244 என்ற XL இருசக்கர வாகனம் தான் என்னுடையது. இந்த வாகனத்தை தான் எதிரி என்னிடம் இருந்து எடுத்துச்சென்றார். **(TN 19 AY 1244 என்ற எண் கொண்ட XL இருசக்கர வாகனம் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

4. போலிசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் என் வீட்டில் வைத்தும் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். போலிசார் என்னை இரண்டு முறை விசாரித்தார்கள். எதிரி கத்தியை வைத்து மிரட்டி என் கையை கிழித்து வண்டியை பறித்து சென்றுவிட்டார் என புகாரிலும், போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். காயம் ஏற்பட்டதற்கு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேனா என்றால் எடுத்துக்கொண்டேன், அதற்கான ஆவணத்தை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்தபோது நான் நெல்வாய் கூட்ரோட்டில் இருந்து புழுதிவாக்கம் மதுபானக்கடைக்கு சென்றேன். அப்போது நான் மட்டும் தனியாக தான் வந்தேன். அப்போது இரவு 8.00 மணியிருக்கும் என்றால் சரிதான். அது வேடந்தாங்கள் செல்லும் வழி என்றால் சரிதான், அது ஒரே வழி என்றால் சரிதான்.

5. சம்பவம் நடக்கும்போது ஆட்கள் வேறு யாராவது இருந்தார்களா என்றால் இல்லை. சம்பவம் நடந்த இடத்திற்கும் மதுபானக்கடைக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 2 கி.மீ, தூரம் இருக்கும். எதிரியை கடைசியாக எப்போது பார்த்தேன் என்றால் என்னிடம் இருந்து வண்டியை எடுத்துச்சென்றபோது தான் பார்த்தேன். எதிரியை போலிசாரிடம் அடையாள அணிவகுப்பில் அடையாளம் காட்டினேனா என்றால் காவல் நிலையத்தில் டிவியில் பல வண்டிகளை காட்டி என்னுடைய வண்டி எது என்று கேட்டார்கள், நான் என்னுடைய வண்டியையும், அதை ஓட்டிச்சென்ற எதிரியையும் அடைளாயம் காட்டினேன். நான் கண்காணிப்பு கேமராவில் தான் அடையாளம் காட்டினேன் என்றால் சரிதான். 10பேரை நிற்கவைத்து போலிசார் அடையாள அணிவகுப்பு நடத்தவில்லை என்றால் சரிதான்.

6. என்னிடம் காட்டப்படும் புகாரை நான் எழுதினேனா என்றால் இல்லை, காவல் நிலையத்தில் ஒருவர் எழுதிக்கொடுத்தார், அவர் யார் என்று தெரியாது, ஆளை பார்த்தால் அடையாளம் காட்டமுடியும். புகாரின் தலைப்பில் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். புகாரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று சொல்லமுடியுமா என்றால் எனக்கு படிக்க தெரியாது. அதில் என்ன விவரம் உள்ளது என்று எனக்கு தெரியாது. வண்டியை கைப்பற்றியபிறகு வண்டியை தற்போதுதான் பார்க்கிறேனா என்றால் இல்லை. நான் எந்த தேதியில் வண்டியை அடையாளம் காட்டினேன் என்றால் தேதி தெரியவில்லை. நான் புகாரை எந்த தேதியில் கொடுத்தேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. இந்த வழக்கின் இருசக்கர வாகனம் என்னுடையது தான், எனக்கு ஓட்டுநர் உரிமம், RC புக் ஆகியவை உள்ளதா என்றால் உள்ளது. அவற்றை போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை.

7. புகாரில் எதிரியின் அங்க அடையாளங்களை குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை, இருட்டில் எனக்கு அடையாளம் தெரியவில்லை. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், போலிசார் போட்ட பொய் வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தின்போது நான் மது அருந்தியிருந்தேனா என்றால் இல்லை. வாகனத்தை கைப்பற்றும்போது எதிரியை அடையாளம் காட்டவில்லை என்றால் சரிதான்.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 490/2025

Miscellaneous :

Deposition of Witness for : PW 2

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | வரலட்சுமி |
| Father / Husband Name | குமார் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 05.03.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது இந்திராபுரத்தில் வசித்து ஏரி வேலை செய்து வருகிறேன். 09.02.2025 ம் தேதி என் கணவர் வேலையை முடித்துவிட்டு அவரது TN 19 1244 என்ற XL இருசக்கர வாகனத்தில் புழுதிவாக்கம் ஒயின்ஷாப்பிற்கு போகும்போது ஒரு நபர் லிப்ட் கேட்டதாகவும், அவரை வண்டியில் ஏற்றிக்கொண்டு செல்லும்போது சம்பளப்பணம் ரூ.2000/- சட்டை பையில் வைத்திருந்தார். அந்த நபர் எனது கணவரின் பின்னால் கத்தியை காட்டி ரூ.2000/- பணம் மற்றும் XL இருசக்கர வாகனத்தை பறித்துக்கொண்டு எனது கணவரின் கையில் கத்தியால் கிழித்துவிட்டு சென்றுவிட்டார். இது சம்மந்தமாக என் கணவர் வீட்டிற்கு வந்து என்னிடம் சொன்னார். சுமார் 2-3 நாட்கள் வண்டியை தேடிபார்த்துவிட்டு பின்னர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். பின்னர் 3 மாதம் கழித்து வண்டியை கண்டுபிடித்துவிட்டதாக காவல் நிலையத்தில் இருந்து போன் செய்து சொன்னார்கள். நாங்கள் காவல் நிலையம் சென்று எங்களது XL இருசக்கர வாகனத்தை அடையாளம் காண்பித்தோம். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் காவல் நிலையத்திற்கு சென்று வண்டியை பார்த்தேன். எப்போது பார்த்தேன் என்றால் 3 மாதத்திற்கு முன்பு பார்த்தேன். காவல் நிலையத்தில் கைப்பற்றி வைத்திருந்த பிறகு பார்த்தேன் என்றால் சரிதான். என் கணவர் வண்டியை தொலைத்துவிட்டார் என்றாலும், போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.